சி.சி.எண். 53/2022

பெயர் – ரவிகுமார்

நாள் – 07.10.2022

எதிரி லட்சுமிபதிக்கும் எனக்கும் 8 வருடமாக பழக்கம். எதிரி பட்டாசு தொழிலுக்கான குழாய் மிசின் வைத்து தொழில் செய்து வருகிறார். எதிரி என்னிடம் ரூ.1100000/– லட்சம் கடன் கேட்டார். 05.09.2019 ம் தேதி ரூ.100000/– மும், 24.09.2019 தேதியில் ரூ.1000000/– ஐ லட்சுமிபதியின் தகப்பனாரான சொர்ணவேலின் திருநெல்வேலி கார்ப்பரேசன் வங்கிக்கு பணபரிவர்த்தனை செய்தேன். பணத்தை திருப்பி கேட்டதற்கு கொரோனா காலம் என்பதால் பணம் இல்லை என்று சொல்லிவிட்டார். 21.03.2022 ம் தேதி தமிழ்நாடு எச்டிஎப்சி காசோலை எண்.000052 ரூ.1100000/–க்கான காசோலையை லட்சுமிபதி என்னிடம் கொடுத்தார். அதனை நான் ஏழாயிரம்பண்ணை தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் 29.04.2022 ம் தேதி வசூலுக்காக தாக்கல் செய்தேன். 02.05.2022 ம் தேதியில் மேற்படி காசோலை போதிய பணம் இல்லை என்று திருப்பட்டுவிட்டது. மீண்டும் ஒரு மாதம் கழித்து மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ய சொன்னார். எனவே நான் 06.06.2022 ம் தேதி மேற்படி காசோலையை மீண்டும் வசூலுக்கு தாக்கல் செய்தது Payment Stopped என 09.06.2022 ம் தேதி திருப்பபட்டுவிட்டது. எதிரியிடம் பணத்தை திரும்ப கேட்டு 06.07.2022 ம் தேதி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். அந்த சட்ட அறிவிப்பை எதிரி வாங்க மறுத்து 15.07.2022 ம் தேதி திரும்ப வந்துவிட்டது. எதிரி பணம் கொடுக்கவில்லை. என்னுடைய பணத்தை எதிரி ஏமாற்றி, மோசடி செய்துவிட்டார். எனவே எதிரி மீது தக்க நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.